ம்டிக் கதைகள்

நிமிஷக் கதைகள்

பதிப்பாசிரியர்:

அழ. வள்ளியப்பா

தமிழ் நிலையம்

மார்த்தாண்டபுரம்

புதுக்கோட்டை.

நிமிஷக் கதைகள்

பதிப்பாசியர் :

அழ. வள்ளியப்பா

தமிழ் நிலையம்

மார்த்தாண்டபுரம்

புதுக்கோட்டை.

முதற் பதிப்பு : ஏப்ரல் 1948.
இரண்டாம் பதிப்பு : ஜனவரி 1960.
மூன்றாம் பதிப்பு : செப்டம்பர் 1963.
உரிமை பதிவு செய்யப்பெற்றது.

0–80 ந. பை.

அச்சிட்டோர் :
ஸ்ரீ முருகன் (பவர்) பிரஸ்,
விருத்தாசலம்.

அருமைக் குழந்தைகளே !

'பாலர் மலரில் வெளிவந்த கதைகளில் நல்ல கதைகள் ஏராளமாக இருக்கின்றன. அவைகளை எல்லாம் சேர்த்து ஏன் ஒரு புத்தகமாக வெளியிடக்கூடாது ?' என்று குழந்தைகளில் அநேகர் ஆவலுடன் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள்.

அவர்களுடைய ஆசையைப் பூர்த்தி செய்யும் பொறுப்பு எங்களுக்கு ஏற்பட்டது. பொறுப்பை உணர்ந்தோம்; உணர்ச்சி உருவானது; அந்த உருவம்தான் 'நிமிஷக் கதைகள்' என்னும் இந்தப் புத்தகம்.

கதைகளைப் படிப்பதில் நீங்கள் அதிக நேரம் செலவிட வேண்டாம். ஒவ்வொரு கதையையும் ஒரே நிமிஷத்தில் படித்து முடித்து விடலாம்.

கதைகள் யாவுமே, ஏற்கனவே பாலர் மலரில் வெளிவந்தவைகள். எழுதியவர்களும் அநேகமாகப் பாலர்கள்தாம்.

'பாலர் கதைகள்' புத்தகத்தைப் போலவே இதற்கும் நல்ல ஆதரவும், வரவேற்பும் இருக்குமென நம்புகிறோம்.

கதைகள் எழுதிய எல்லோருக்கும் நன்றி.

சென்னை }
1-4-48 }

அழ. வள்ளியப்பா

கதைகளின் வரிசை.

மூன்று பூனைகள் 5
தேளின் வரம் 7
கந்தன் கண்ட கதைகள் 10
விதூஷக வீரன் 12
படிக்காத கிழவன் 15
அரசனின் விருந்து 17
பாலும் நீரும் 19
எலியின் பகைவன் 21
மனப் பேய் 24
வதந்தி வளர்ந்தது! 27
மந்திரி சொன்னது 29
சோதிடனின் கல் 31
பட்டுவும் கிட்டுவும் 33
திருடர்கள் ஜாக்கிரதை? 35
தப்பித்தார்! 37
கந்தன் கண்ட காந்தி 39
யார் அரசன்? 42
அப்துல்லாவின் ஏமாற்றம் 44
எப்படி நேர்ந்தது? 47

மூன்று பூனைகள்

சி. பி. லெக்ஷ்மணசாமி

ஒரு வீட்டில் மூன்று பூனைகள் வளர்ந்து வந்தன. இரண்டு வெள்ளைப் பூனைகள்; ஒன்று மட்டும் கருப்புப் பூனை. மூன்றுமாகச் சேர்ந்து, சத்தம் போடாமல் சமையல் கட்டுக்குள் சென்றன.

சமையல் கட்டில் தேடிப்பார்த்தன. உயரத்தில் ஓர் உறி இருந்தது. அந்த உறியில் ஒரு ஜாடி இருந்தது. அதில் நிறைய வெண்ணெய் இருப்பதைத் தெரிந்து கொண்டன அந்தப் பூனைகள்.

ஒரு பூனை, "நீங்கள் இரண்டு பேரும் ஒருவர் மேலே ஒருவர் குனிந்து கொள்ளுங்கள். நான் உங்கள் மேலே ஏறி, ஜாடியிலிருக்கும் வெண்ணெயைக் கீழே எடுத்துப் போடுகிறேன். அப்புறம் எல்லோருமாகச் சாப்பிடலாம்!" என்றது.

"அதுதான் சரி!" என்று மற்றப் பூனைகளும் சம்மதித்தன.

கறுப்புப் பூனை மேல் இரண்டு வெள்ளைப் பூனைகளும் ஜாக்கிரதையாக ஏறிக்கொண்டன.



அந்தச் சமயத்தில், நடுவில் நிற்கும் வெள்ளைப் பூனை, தன் முதுகில் நிற்கும் பூனையிடம், இரகசியமாக "வெண்ணெயை எடுத்து, நீ பாதி சாப்பிட்டுவிட்டு, என் வாயில் பாதியைப் போட்டு விடு. கறுப்புப் பூனையை ஏய்த்து விடலாம்!" என்றது. 'சரி' என்று மேலே இருந்த பூனை ஒப்புக்கொண்டது.

அந்தச் சமயத்தில், அந்த வழியாக ஒரு எலி வந்தது. எலியைக் கண்டதும் கறுப்புப் பூனைக்கு வெண்ணெய் சாப்பிட வேண்டும் என்பது மறந்தே போய்விட்டது. எலியைத் துரத்த ஒரு தாவுத் தாவிற்று! அவ்வளவுதான், மேலே இருந்த இரண்டு பூனைகளும் 'மடா' ரென்று கீழே விழுந்தன. விழுந்த வேகத்தில் இரண்டுக்கும் நல்ல அடி. பாவம்!

பேராசைப்பட்டுப் பெருநஷ்டம் ஏற்பட்டது.

தேளின் வரம்.

க. சந்தானம்

தேள் ஒருநாள் மிகுந்த விசனத்தோடு விஷ்ணுவிடம் சென்றது. விஷ்ணு தேளைப் பார்த்ததும், "என்ன தேளே, ஏன் இப்படி முக வாட்டத்தோடு இருக்கிருய்?" என்று கேட்டார்.

"ஏன் சுவாமி கேட்கிறீர்கள். எனக்கு இந்த உலகமே பிடிக்கவில்லே. இறந்து விட லாம் என்று நினேக்கிறேன். ஆனல், எப்படி இறப்பது என்பதுதான் தெரியவில்லே. அப்படியே இறந்தாலும் அப்பொழுது யார் அழுவார்கள்? ஏதாவது யோசனே கேட்கலாம் என்றுதான் உங்களிடம் வந்தேன்," என்றது.

விஷ்ணு யோசித்துப் பார்த்தார். ஒன்றும் புரியவில்லே.

"எனக்கு ஒரு யோசனேயும் தோன்ற வில்லே. சிவபெருமானிடம் சென்று கேள். பலன் உண்டு." என்று சொல்லி அனுப்பிவிட் டார்.

தேள் சிவனிடம் சென்றது. அவருக்கும் என்ன பதில் சொல்வது என்று புரியவில்லே. பிரம்மாவிடம் செல்லும்படி கூறிவிட்டார்.

பிரம்மா தேள் கூறியதைக் கேட்டுவிட்டு சிறிது நேரம் யோசனை செய்தார். பிறகு,

"இதோ சொல்கிறேன், கேள். நீ எப்பொழுது இறந்து போக இஷ்டப்படுகிறயோ, அப்பொழுதே இறந்து போகலாம். அதற்கு நீ என்ன செய்ய வேண்டும் தெரியுமா? யாரையாவது ஒரு மனிதனைக் கொட்டிவிடு. உடனேயே உன்னைக் கொன்று விடுவார்கள். நீ கொட்டிய மனிதனும் வலியினல் அழுவான். சரிதானு?" என்று கூறினர்.

இதைக் கேட்டதும் தேளுக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாகி விட்டது. 'பிரம்மா நீடூழி வாழ்க!' என்று கத்திக் கொண்டே தன் குடும்பத்துக்கு வந்தது. அங்கு உள்ளவர்களிடம் விஷயத்தைச் சொல்லியது. இதைக் கேட்டு, தேள்களெல்லாம் மகிழ்ந்தன.

இவைகள் சந்தோஷமாக இருக்கும்போது; அந்தப் பக்கமாக ஒரு மனிதன் சென்றுன். உடனேயே ஒரு தேள் சந்தோஷத்தினல்

குதித்து அவன் காலில் விழுந்து கொட்டி விட்டது. உடனேயே அந்த மனிதன் பக்கத்தில் கிடந்த கம்பால் அடித்து அந்தத் தேளைக் கொன்று விட்டான். பிறகு 'ஓ' வென்று வலி பொறுக்காமல் அழுது கொண்டேயிருந்தான்.

இதைக் கண்ட மற்ற தேள்களெல்லாம் சந்தோஷம் அடைந்தன. தாங்கள் இறந்தால் மனிதர்கள் கூட அழுகிறார்கள் என்பதுதான் சந்தோஷத்துக்குக் காரணம்! எல்லாத் தேள் களும் சேர்ந்து 'பிரம்மா நீடூழி வாழ்க!' என்று வாழ்த்தின.

கந்தன் கண்ட கடிதம்

தசரதராமன்

கந்தன் ஒரு நாவிதன். அவனுக்குச் சொந்தமாக ஒரு 'ஷாப்' உண்டு. அவன் வருமான வரி உத்தியோகஸ்தருக்கு க்ஷவரம் செய்ய ஒரு நாள் சென்றிருந்தான். ஒன்றறை மணிநேரம் காத்திருந்த பிறகே உத்தியோகஸ்தர் வந்தார். க்ஷவரத்தை முடித்துக்கொண்டதும், உத்தியோகஸ்தர் கந்தனிடம் அரை ரூபாய் நாணயத்தை நீட்டினர்.

'என்ன சாமி, அரை ரூபாய் தருகிறீர்களே! நான் இங்கே இரண்டு மணி நேரமாக காத்துக்கொண்டே இருந்திருக்கிறேன். ஷாப்பில் இருந்தால் ஒரு ரூபாய்க்குக் குறையாது சம்பாதித்திருப்பேனே! என்று கந்தன் குறை கூறினன்.

அவன் இப்படிக் கூறியதைக் கேட்ட உத்தியோகஸ்தர், ஒன்றும் பேசாது, ஒரு ரூபாய் நாணயத்தை அவனிடம் கொடுத்து

விட்டுச் சென்றார். கந்தன் சந்தோஷமாக வீடு சென்றான். சிறிது நேரத்திற்கெல்லாம் அவனுக்கு ஒரு கடிதம் வந்தது. உறையைப் பிரித்து உள்ளே இருந்த கடிதத்தைப் படித்தான். உடனே அவன் மூர்ச்சை அடைந்து விட்டான்! காரணம் என்ன தெரியுமா? கடிதத்தை நீங்களே படித்துப் பாருங்களேன்.

கந்தனுக்கு,

நீ உண்மையை உரைத்தது பற்றி சந்தோஷம். உன் ஷாப்பில் நீயும், உன்னிடமுள்ள ஆட்களுமாகச் சேர்ந்து மொத்தம் ஆறு பேர் இருக்கிறீர்கள். அறுவரும் மணிக்கு 8 அணு வீதம் சம்பாதித்தால் ஒரு மணி நேரத்தில் 3 ரூபாய் ஆகிறது. தினம் நீங்கள் எல்லோரும் 12 மணி நேரம் வேலை செய்வதாகக் கேள்விப்பட்டேன். ஆகையால், உனக்குத் தின வரும்படி ரூ. 36-ம், மாத வரும்படி ரூ. 1080-ம் வருஷ வரும்படி ரூ. 12,960-ம் ஆகிறபடியால், நீ அவசியம் வருமான வரி கட்டவேண்டியதுதான். நாளை ஆபீஸில் வந்து நீ ஆஜராக வேண்டியது.

இப்படிக்கு,
தசரதராமன்,
வருமான வரி ஆபீஸர்.

விதூஷக வீரன்

எம். எஸ். பாலசுப்பிரமணியன்

ஒரு அரசனிடம் ஒரு விதூஷகன் இருந்தான். அவன், ஒரு போர்வீரன் ஆகவேண்டும் என்று ஆசைப்பட்டான். அரசனிடம் இதைப் பற்றி அடிக்கடி கூறித் தொந்தரவு செய்தான். அரசன் எவ்வளவோ சொல்லியும் அவன் கேட்கவில்லை. கடைசியில், அவனை ஓர் போர் வீரனுக்கி விட்டான், அரசன்.

விதூஷகன் போர்வீரனின் உடைகளை அணிந்து இங்கும், அங்கும் நடந்து திரிந்தான். ஒவ்வொரு நாளும் அரண்மனையை இரண்டு போர் வீரர்கள் காவல் காப்பது வழக்கம். ஒரு நாள் விதூஷகனின் முறை வந்தது.

விதூஷகனல், இரவு நேரத்தில் காவல் காக்க முடியவில்லை. தூக்கம் வந்தது. தூங்கிப்போய்விட்டான்.

அவன் சரியாக வேலை பார்க்கிருனு என்று இரவில் அரசன் வந்து பார்த்தான். அவன் தூக்கத்தில் இருந்தான். உடனே அரசன்

அவனுடைய உறைவாளில் இருந்த கத்தியை உருவிக்கொண்டு போய்விட்டான்.

விடிந்ததும், விதூஷகன் உறைவாளைப் பார்த்தான்; கத்தியைக் காணும்! அதற்குப் பதிலாக மரத்தால் ஒரு கத்தி செய்து, அந்த உறைக்குள் போட்டுவிட்டான். கத்தி முழுவதையும் வெளியில் எடுத்தால்தான் மரக்கத்தி என்பது தெரியும். ஒன்றுமே தெரியாதவன் போல நடந்துகொண்டான்.

அரசன் அவனுடைய 'குட்டை' உடைக்க எண்ணினான். சபையில் இருக்கும்போது திடீரென்று ஒரு வீரன்மேல் கோபித்துக்கொள்வது போலப் பாவனை செய்தான். பிறகு விதூஷக வீரனைப் பார்த்து, "உன்னுடைய வாளால் இவனுடைய தலையை வெட்டுவாயாக?" என்றான்.

அரசன் இப்படிக் கூறியதும், விதூஷகனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. சிறிது யோசித்தான். பிறகு, "கடவுளே, இவனோ எந்தவிதமான குற்றமுமே செய்யாதவன். இவனை வெட்டுவதற்கு நான்தானா அகப்பட்டேன்? நீ இருப்பது உண்மையானால், என்னுடைய கத்தி மரக்கத்தியாகப் போக வேண்டும்" என்று பிரார்த்தனை செய்து கொண்டே வாளை உருவினான்!

அவனுடைய கத்தி மரக்கத்தியாக இருப்பது கண்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். ஆனால், அரசன் மட்டும் ஆச்சரியப்படவில்லை. அவனுக்குத்தான் உண்மை தெரியுமே! அவன், விதூஷகனுடைய புத்தி சாதுர்யத்தைக் கண்டு சந்தோஷம் அடைந்தான். அவனை மன்னித்தும் விட்டான்.

படிக்காத கிழவன்

கே. சந்திரசேகரன்.

சுந்தரன் பட்டாளத்தில் சேர்ந்திருந்தான். அவனுடைய தகப்பன் ஒரு கிழக்குடியானவன். அந்தக் கிழவனுக்கு எழுதப் படிக்கத் தெரியாது.

சுந்தரன் ஒரு நாள், தகப்பனுக்கு ஒரு கடிதம் போட்டிருந்தான். கடிதத்தை வாசிக்கத் தெரியாத கிழவன், அந்த வழியே போன வழிப்போக்கன் ஒருவனிடம் கடிதத்தைக் கொடுத்து வாசிக்கச் சொன்னான்.

வழிப்போக்கன் அதைப் படித்துவிட்டு, 'இதில் ஒரு ஜோடி பூட்ஸ் வாங்கி அனுப்பும்படி எழுதி இருக்கிறது' என்று சொன்னான்.

அதற்குக் கிழவன் "பூட்ஸை எப்படி அவ்வளவு தூரத்துக்கு அனுப்புவது? இதற்கு ஒரு வழி சொல்லமாட்டீர்களா?" என்று கேட்டான்.

"எப்படி அனுப்புவதா? இதோ தெருவில் தெரிகிறதல்லவா, தந்திக் கம்பி. இதில் கட்டி விட்டால் பூட்ஸ்கள் போய் சேர்ந்து விடுகின்றன" என்று கூறினான், வழிப் போக்கன்.

அதை நம்பிய கிழவன், புது பூட்ஸ் ஒரு ஜோடி வாங்கி, தந்திக் கம்பியில் கட்டிவிட்டான்!

வழிப்போக்கன் அவற்றைப் பார்த்ததும், மெதுவாக அவற்றை அவிழ்த்துக் கொண்டு தன்னுடைய பழைய பூட்ஸ்களை அந்தக்கம்பியில் மாட்டி வைத்துவிட்டு போய்விட்டான்.



கிழவன் வந்து பார்க்கும் போது பழைய பூட்ஸ்கள் இருந்தன. உடனே அவன், தன் மகனுக்கு புது பூட்ஸ்கள் கிடைத்துவிட்டன என்றும், அதனாலேயே அவனுடைய பழைய பூட்ஸ்களை அனுப்பி விட்டான் என்றும் நினைத்து, அந்தப் பழைய பூட்ஸ்களை எடுத்துக் கொண்டு போய் வீட்டில் வைத்திருந்தான்.

சில நாட்கள் சென்றன. சுந்தரன் தகப்பனைக் காண லீவில் வந்தான். கிழவன் மகனைப் பார்த்ததும், 'நான் அனுப்பின புது பூட்ஸ்கள் வந்து சேர்ந்தனவா ?" என்று ஆவலாய் கேட்டான்.

சுந்தரன், "இல்லை" என்று சொன்னதும், கிழவன் நடந்ததைச் சொன்னான். இதைக் கேட்டதும் சுந்தரனுக்கு ஒரு பக்கம் சிரிப்பும், ஒரு பக்கம் வருத்தமும் ஏற்பட்டன.

அப்பொழுது கிழவன் "ஐயோ ! படிக்காத தாலல்லவா வழிப்போக்கனை நம்பி ஏமாந்து போனேன் !" என்று வருத்தப்பட்டான்.

அரசனின் விருந்து

செ. க. ச.

தர்மபுரியை பார்த்திபன் என்ற அரசன் ஆண்டு வந்தான் அவன் மிகவும் அற்பன். அரண்மனைக்கு வந்தவர்களைச் சரியாக வரவேற்கவோ, உபசரிக்கவோ மாட்டான்.

ஒரு நாள், பார்த்திபன், ஒரு அறிவாளியை விருந்துக்கு அழைத்திருந்தான். இருவரும் விருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது, இருவருக்கும் மீன்கள் பரிமாறப் பட்டன. அரசனுக்குப் பெரிய மீன்களும், விருந்தாளிக்குச் சிறிய மீன்களுமாக வைக்கப்பட்டன.



விருந்தாளி இதைக் கவனித்தார். அவருக்கு மிகவும் வருத்தமாகப் போய்விட்டது. அரசனுடைய அற்ப குணத்தைப் பார்த்து அவனுக்குச் சரியாகப் புத்தி புகட்ட எண்ணினார்.

உடனே, அவர் ஒரு மீனை எடுத்து வாயின் அருகில் வைத்துக்கொண்டு, ஏதோ முணு முணுத்தார். பிறகு அதைக் காதின் அருகிலும்

வைத்து ஏதோ பதிலை எதிர்பார்ப்பவர் போல் பாசாங்கு செய்தார். இப்படியே ஒவ்வொரு மீனை யும் செய்தார். இதைப் பார்த்தான், பார்த்திபன். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

“ஏன், அப்படிச் செய்கிறீர்கள்?” என்று அவன் அறிவாளியைக் கேட்டான்.

அதற்கு அவர், “என் தகப்பனுர் கொஞ்ச காலத்துக்கு முன்னுல் துர்அதிர்ஷ்ட வசமாக கடலில் விழுந்து விட்டார். அதற்கு மேல், அவரைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியவில்லை. ஆகையால், இந்த மீன்களைக் கேட்டால் தெரி யும் என்று எண்ணியே இப்படிச் செய்தேன்” என்ருர்.

அரசனுக்கு இது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. “சரி, அதற்கு அவை என்ன பதில் கூறின?” என்று கேட்டான்.

“அச்சம்பவம், எங்களுக்கு முன்னுல் ஏற் பட்டது. நாங்களெல்லாம் சிறிய மீன்கள் தானே! எங்களுக்கு என்ன தெரியும்? அதோ அந்த அரசர் வைத்திருக்கும் பெரிய மீன்களைக் கேட்டால் தெரியும் என்று சொல்லுகின்றன” என்று பதில் கூறினுர், அறிவாளி.

இதைக் கேட்டதும் அரசனுக்கு உண்மை விளங்கி விட்டது. உடனே அவருக்கும் பெரிய மீன்களைக் கொண்டு வந்து வைக்கும்படி செய் தான். அது முதல், அவன் விருந்தாளிகளை மிகவும் ஜாக்கிரதையாக உபசரிக்கலானுன்.

பாலும் நீரும்

—' புஷ்பி '—

பால்காரன் வழக்கம்போல் தண்ணீர் கலந்த பாலை ஹோட்டல்காரனிடத்தில் கொடுத்து விட்டுச் சென்றான். அதை, வேலைக்காரன் வாங்கி அடுப்பின் மேல் வைத்து விட்டு, வேறு வேலை செய்யலானான்.

பாத்திரத்தில் கொஞ்சம் சூடேறியதும், தண்ணீர் பாலைப் பார்த்து; "நண்பா! உன்னுடைய சேர்க்கையால் எனக்கு மதிப்பும் மரியாதையும் கிடைத்திருக்கின்றன. இல்லாவிடில், என்னைப் பணம் கொடுத்து வாங்குவார் உண்டோ? ஆதலால், உன்னை என் உயிர் போகும்வரை மறக்கவே மாட்டேன்" என்றது.

பாத்திரத்தில் அதிகமாகச் சூடு ஏற, ஏற, பாலில் கலந்திருந்த நீர் குறைந்து கொண்டே வந்தது. தன்னைவிட்டுப் பிரியும் நீரைக் கண்டு, பாலுக்கு நெருப்பின் மேல் கோபம் கோபமாக வந்தது.

அது நெருப்பைப் பார்த்து, “அடே பயலே, என் நண்பனை என்னிடமிருந்து பிரித்துவிட்டாய் அல்லவா? இதோ பார், உன்னை அணைத்து விடுகிறேன்” என்று சொல்லி, ‘குபு, குபு’ என்று பொங்கி நெருப்பின் மேல் விழுந்து அணைக்கப் பார்த்தது.

நெருப்பு அணையப் போகும் சமயம். அப்போது வேலைக்காரன் அங்கே வந்து விட்டான். பால் கோபத்துடன் பொங்கி நெருப்பை அணைப்பதைப் பார்த்தான்.

“பாலே, கோபம் கொள்ளாதே. கொஞ்சம் பொறுத்துக் கொள். இதோ உன் நண்பனைக் கூட்டி வந்து விடுகிறேன்” என்று கூறி, கொஞ்சம் தண்ணீரைக் கொண்டு வந்து பொங்கும் பாலில் ஊற்றினான்.

பிரிந்த நண்பன் மறுபடியும் வந்து சேர்ந்ததைக் கண்டதும் பாலுக்குச் சந்தோஷம் வந்து விட்டது; கோபம் அடங்கியது; சப்தம் நின்றது.

பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?

எலியின் பகைவன்

ஆர். சிதம்பரம்.

அன்று பூனைராஜாவின் பங்களாவில் ஒரே கொண்டாட்டம். அவர் மகள் சுந்தரிக்கும் உத்திராட்சப் பூனையார் மகன் இந்திரனுக்கும் கலியாணம் நடந்தது. முகூர்த்தம் முடிந்ததும், முதலில் குரங்கப்பபிள்ளையின் நாதஸ்வரக் கச்சேரியும், பிறகு கிளியப்ப பாகவதரின் பாட்டுக் கச்சேரியும் மீனும்பரளின் நாட்டியமும், ஜோராக நடந்தேறின.

பூனைராஜா சமையல் வேலைகளுக்கு எலியப்பராயரை நியமித்தார். எலியப்பராயர் அன்று 2-வது ஆட்டம் சினிமாவுக்கு போய்விட்டு வந்ததால், தூக்கவெறியில் இருந்தார். ஆனால், விடிவதற்குள் சமையல் ஆகவேண்டும். கைக்குக் கிடைத்த சாமான்களைப் போட்டு விடியு முன்பே சமையல் செய்து முடித்து விட்டார்.

காலையில் எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தார்கள். சாப்பிடச் சாப்பிட, 'ஆ, ஊ, இச், தூ'

என்று சப்தம் செய்து கொண்டே சாப்பிட்டார்கள். காரணம் என்னவென்ருல், மோர்க்குழம்புக்கு உப்புப் போடவில்லை; சாம்பாருக்குப் பெருங்காயம் அதிகம். ரசத்தில் மிளகாய்ப் பொடிக்குப் பதிலாக சர்க்கரையும், பாயசத்தில் சர்க்கரைக்குப் பதிலாக மிளகாய்ப் பொடியும் போடப்பட்டிருந்தன.

இதை அறிந்த பூனைராஜா 'இம்' என்று உதட்டைக் கடித்துக்கொண்டு எலியப்பராயரை ஒரு பார்வை பார்த்தார். எலியப்பராயரும் என்ன நேருமோ என்று நடுங்கிக்கொண்டே எல்லோருக்கும் பரிமாறினுர். சாப்பாடு முடிந்ததும் எல்லோரும் "சீ, சீ! என்ன சாப்பாடு?" என்று ஏளனம் செய்து கொண்டே போனுர்கள். பூனைராஜாவுக்கு இதைக் காண சகிக்கவில்லை.

தமது ஒரே அருமைப் புதல்விக்குக் கலியாணம் செய்து எல்லாச் சீர் வரிசைகளும் சிறப்பாக நடந்தும், சாப்பாட்டு விஷயத்தில் இப்படி மானம் போய் விட்டதே என்று எண்ணும்போது தாங்கமுடியாத துக்கம் வந்தது. எலியப்பராயரைப் பார்த்துப் பல்லைக் கடித்துக் கொண்டார்.

எலியப்பராயர் நடுக்கத்துடனேயே கடைசிப் பந்தியில் பரிமாறிக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர் கையிலிருந்த பாயசம் சம்பந்தியாருடன் சாப்பிட்டுக் கொண்டிருந்த பூனை

ராஜாவின் இலையில் 'பொத்' என்று விழுந்து விட்டது. பூனைராஜாவுக்குக் கோபம் இன்னும் அதிகமாகி விட்டது.

ஆனால், எலியப்பராயரும், அவர் சகாக்களும் விழுந்தடித்து ஓடி, வளைக்குள் புகுந்து கொண்டார்கள். பூனையாருக்கோ கோபம் தணியவில்லை. எலியப்பர்களை எங்கு கண்டாலும் கொல்லுவோம்; கொன்று தின்போம்' என்று பூனையப்பரும், அவருடைய சொந்தக்காரர்களும் அன்றே கங்கணம் கட்டிவிட்டார்கள்.

மனப் பேய்

பி. வி. ஆர். பாண்டியன்

மங்களபுரி என்னும் நகரில் கிருஷ்ணன், ராமன் என்னும் இரு நண்பர்கள் இருந்தனர். அவர்களில் கிருஷ்ணனுக்குப் பேய் என்ருல் மிகவும் பயம். ராமனே, "பேயாவது! எல்லாம் மனப்பேய்தான்!" என்று சொல்வான்.

ஒரு நாள், இருவரும் ஜெயபுரி என்னும் ஊருக்குக் கால்நடையாகவே சென்றனர். வழியில் ஒரு பெரிய காட்டைக் கடக்க வேண்டியி

ருந்தது. ஆனால், இடையில் இருட்டிவிட்டது. மணிபத்தாகியும் இவர்கள் காட்டைக் கடக்க வில்லை. அப்பொழுது வெகுதூரத்தில் இரு விளக்குகள் இவர்களை நோக்கி வந்துகொண்டி ருப்பது தெரிந்தது. இதைக் கண்ட கிருஷ்ணன், "ஐயோ, கொள்ளிவாய்ப் பிசாசல்லவா நம்மை நோக்கி வருகிறது!" என்று அலறி ஓலமிட்டான்.

ஆனால், ராமன் "அதெல்லாம் இராது" என்று சொல்லிப் பயப்படாமல் இருந்தான். சற்று நேரத்தில், விளக்குகள் இவர்களை நெருங்கியது. இப்பொழுது ராமனுக்கும் கொஞ்சம் பயமாகவே இருந்தது. ஆனால் பயத்தை அடக்கிக் கொண்டு உரத்த குரலில் "யார் அங்கே?" என்று கேட்டான்.

அதற்கு அங்கிருந்து பிரயாணிகளே, நீங்கள் ஏன் இந்த நேரத்தில் இங்கு பிரயாணம் செய்கிறீர்கள்?" என்று பதில் வந்தது.

இதைக் கேட்டதும், ராமன் சந்தோஷத் தோடு "ஐயா, நாங்கள் ஜெயபுரிக்குச் செல் கிறோம்" என்றான்.

அதற்குள் விளக்கு கொண்டுவந்த இரு மனிதர்கள் இவர்களிடம் வந்து, நாங்கள் மராமத்து இலாகா உத்தியோகஸ்தர்கள்.

நாங்கள் காட்டைப் பார்வையிட்டு வருகிறோம். மிருகங்கள் பூச்சிகள் ஏதேனும் திரியும். விளக்கு இல்லாமல் செல்லாதீர்கள்" என்று சொல்லி ஒரு விளக்கையும் ராமன் கையில் கொடுத்தார்கள். இதையெல்லாம் கண்ட கிருஷ்ணன் வெட்கித் தலை குனிந்தான்.

அது முதல், கிருஷ்ணன் பேயென்றால் நம்புவதே கிடையாது.

வதந்தி வளர்ந்தது!

சுப. குமரப்பா

இராவ்சாகிப் இராமசாமிக் கவுண்டர் வீட்டின் பக்கத்தில் ஒரு தோட்டம் இருந்தது. ஒரு நாள் இரவு, அங்குள்ள வைக்கோல் போர்மீது ஒரு மின்மினிப் பூச்சி மின்னிக்கொண்டிருந்தது. அந்த வீதி வழியாகப் போன சுப்பிரமணியன் அதைப் பார்த்தான்.

மின்மினிப் பூச்சி நெருப்புடன் கூடிய ஒரு சிகரெட் துண்டாக அவனுக்குத் தோன்றியது. போகும் வழியில் அவனுடைய நண்பன் கணபதியைக் கண்டான். அவனிடம் "கவுண்டர் வீட்டு வைக்கோல்போரில் ஒரு சிகரெட் எரிவதைப் பார்த்தேன்" என்றான்.

"கவுண்டருடைய வீட்டில் சிகரெட் குடிக்க மாட்டார்களே! ஒரு வேளை அவருடைய குழந்தைகள் சுட்ட வெடிகளில் ஒன்று தவறி அதில் விழுந்திருக்கும்" என்றான் கணபதி.

கணபதி தன் மாமனிடம் "கவுண்டருடைய குழந்தைகள் சுட்ட வெடி தவறி வைக்கோல் போரில் விழுந்ததாம். அதில் வைக்கோல் போரே எரிந்து விட்டதாம்!" என்ருன்.

"ஐயோ, அவருடைய வீடு தீப்பிடித்து விடுமே!" என்று மாமன் பரிதாபப்பட்டான்.

அப்பொழுது அவ்வழியாகச் சென்று கொண்டிருந்தான், அவ்வூர்ப் பெரிய கடைப் பையன். அவன் இங்கே பேசியதைக் கேட்டு விட்டான்.

அவன் கடை முதலாளியிடம் "கவுண்டருடைய குழந்தைகள் வெடி சுட்டார்களாம். அது வீட்டில் பற்றி எரிகிறதாம்" என்ருன்.

கடையில் தீபாவளிக்குச் சாமான் வாங்க வந்தவர்கள் இதைக் கேட்டார்கள்.

"கவுண்டரும், அவர் மனைவி மக்களும் நெருப்பினுல் பெருத்தகாயம் அடைந்தார்கள்" என்று இரவு 10 மணிக்கு வதந்தி வளர்ந்து விட்டது.

ஆனுல், தீபாவளியன்று கவுண்டரும், அவருடைய மனைவியும் குழந்தைகளுடன் புதிய உடை உடுத்தி, தேங்காய் பழங்களுடன் கோவிலுக்குச் செல்வதை எல்லோரும் பார்த்தார்கள். கவுண்டருடைய வீடும், அவர் வீட்டுக்குப் பக்கத்துத் தோட்டத்திலிருந்த வைக்கோல் போரும் அப்படியே இருப்பதையும் கண்டார்கள். அப்போது "ஐயோ" வதந்தியை நம்பி ஏமாந்தோமே!" என்று வெட்கம் அடைந்தனர்.

மந்திரி சொன்னது

ஆர். தருமன்

மதனபுரி என்ற நாட்டை மதிவர்மன் என்ற அரசன் ஆண்டுவந்தான். அவன் குடிகளுக்கு யாதொரு குறையுமின்றி கண்ணும், கருத்துமாய் கவனித்து வந்தான். குடிகளும் அவனை விரும்பினர்.

இந்நாட்டின் புகழ் அந்நிய நாடுகளில் எல்லாம் பரவ ஆரம்பித்தது.

பக்கத்து நாட்டு அரசனுகிய பிரதாபன் மிகுந்த கொடுங்கோலன். அவன் குடிகளை மிகவும் கொடுமைப்படுத்தினுன். பிரதாபனின் குடிமக்கள் எல்லோரும் இவன் தொலைய மாட்டானு என்று வேண்டிக் கொண்டிருந்தார்கள்.

கொடுங்கோலனுன பிரதாபன் மதிவர்மனின் புகழைக் கேட்டு, மிகவும் பொருமை கொண்டான். மதிவர்மனை அழிக்க எண்ணி அவன் ராஜ்யத்தின் மீது படையெடுத்தான்.

இச்சண்டையில் கொடுங்கோலனுன பிரதாபனே தோற்றுக் கைதியானுன்.

உடனே மதிவர்மன், பிரதாபனின் தலையை வெட்டும்படி உத்தரவிட்டான்.

அருகில் இருந்த மந்திரி யூகி என்பவர், "இல்லை, இல்லை, இவரைக் கொலை செய்வது அழகல்ல! இவரைக் கிளிபோல் வளர்க்க வேண்டும்" என்று கூறினர்.

இதைக் கேட்ட மதிவர்மன், மிகுந்த கோபத்தோடு "இக்கொடுங்கோலனையா, கிளி போல் வளர்ப்பது ?" என மந்திரியை நோக்கிக் கேட்டான்.

உடனே மந்திரி, "அரசே! இவரை, சீக்கிரம் கொலை செய்வது கூடாது. இவர் குடிகளை எப்படித் துன்புறுத்தினரோ அதேபோல் துன்புறுத்தவேண்டும். எப்படியெனில், கிளியை வளர்க்கக் கூண்டில் அடைப்பதைப் போல், இவரைச் சிறையில் போட்டு அடைத்து வாட்ட வேண்டும், என்று தான் கூறினேன்" என்ருர்.

இதைக் கேட்ட மதிவர்மன் மந்திரியின் சொல் திறமையை மெச்சி ஆச்சரியப்பட்டார். பிரதாபன் மந்திரி யோசனைப்படியே சிறையிலிருந்து வாடி வருந்தி இறந்தான்.

சோதிடனின் கல்

டி. கண்ணன்

சீனுவாசனுக்கு ஒரு சமயம் கொடிய நோய் கண்டது. அவனுடைய தாயார் ஒரு சோதிடரை அழைத்து வந்து, "எப்பொழுது என் பிள்ளையின் நோய் நீங்கும்?" என்று கேட்டாள்.

சோதிடன் சற்று யோசித்தான். பிறகு, ஒரு கல்லைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டான்.

ஏதோ அந்தக் கல்லில் விசேஷம் இருக்கிறது என்று எண்ணி, அந்த அம்மாளும் அதைப் பத்திரப்படுத்தி வைத்திருந்தாள். நாட்கள் செல்லச் செல்ல சீனு குணமடைந்து வந்தான். நன்கு குணமானவுடன் சோதிடன் வந்தான். கல்லைக் கொடுத்ததன் அர்த்தம் என்ன? என்று அவனை சீனுவின் தாயார் கேட்டாள்.

"உன் மகனின் ஆயுள் கெட்டியாயிருக்கிறது என்பதை விளக்கவே அப்படிச் செய்தேன்" என்றான், சோதிடன்.

இதைக்கேட்டு எல்லோரும் சந்தோஷப்பட்டு அவனுக்கு நல்ல வெகுமானம் கொடுத்தார்கள்.

ஒரு சமயம் சீனுவின் தகப்பனருக்கு வியாதி வந்து விட்டது. சீனுவின் தாயார் சோதிடனை அழைத்து வந்து பார்க்கச் சொன்னுள். சோதிடன் பார்த்துவிட்டு, முன்போலவே ஒரு கல்லைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டான்.

சீனுவின் தகப்பனரின் ஆயுளும் கல்லுப் போலக் கெட்டியாக இருக்கும் என்று எல்லோ ரும் எண்ணி, சோதிடனுக்கு மரியாதை செய்து அனுப்பினர்கள்.

ஆனல், சில நாட்களில் சீனுவின் தகப் பனர் இறந்து போய்விட்டார்! நிச்சயம் பிழைத்து விடுவார் என்று எண்ணியிருந்த சீனுவின் தாயாருக்கு இது மிகுந்த ஏமாற்றமாகப் போய் விட்டது. சோதிடன் மீது கோபம் கோபமாக வந்தது. அவனை அழைத்து வரச் செய்து 'எங்களுடைய பணத்தையும் வாங்கிக்கொண்டு, பொய்யையும் சொல்லிவிட்டுப் போய்விட்டாயே! கல்லைக் கொடுத்து விட்டுப்போனது பலிக்க வில்லையே! நீ சுத்தப் புளுகன்; அயோக்கியன்" என்றெல்லாம் திட்ட ஆரம்பித்துவிட்டாள்.

அதற்குச் சோதிடன், "அம்மா, கோபிக்க வேண்டாம். நான் கல்லைக் கொடுத்தது பொய் யாகவில்லை. 'அதிர்ஷ்டம், உன் தலையில் கல் லைப் போட்டுவிட்டது' என்பதற்கு அறிகுறி யாகத்தானே கல்லைத் தந்தேன்! என் சோதிடம் பொய்யாகுமா?" என்று சொல்லிக் கொண்டே கம்பி நீட்டிவிட்டான்.

பட்டுவும் கிட்டுவும்

பி. வெங்கடேசன்

பட்டுவும், கிட்டுவும் நெருங்கிய நண்பர்கள். ஆனால் இருவரும் கர்வம் பிடித்தவர்கள். "உன்னை விட நான் கெட்டிக்காரன்; உன் பலத்தைவிட என் பலம் அதிகம்" என்று இருவரும் அடிக்கடி சண்டை போட்டுக் கொள்வார்கள். இது அவர்களுடைய வழக்கமாக இருந்தது.

ஒருநாள் பட்டு "நான் 100 அடி தூரம் எது எழுதியிருந்தாலும் சரியாகப் படித்து விடுவேன்" என்றான்.

உடனே கிட்டு "இது என்ன பிரமாதம்! நான் 200 அடி தூரத்தில் எது எழுதியிருந்தாலும் படித்து விடுவேனே!" என்றான்.

இப்படியே கொஞ்ச நேரம் தகராறு நடந்தது. பிறகு, அவர்கள் ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதாவது அவர்கள் ஊரிலுள்ள கோவில் சுவர் மீது ஒரு பாட்டு எழுதியிருந்தது. அதற்கு சுமார் 200 அடி தூரத்தில் நின்று கொண்டு இருவரும் அந்தப் பாட்டை படிக்கவேண்டும். எவன் பிழை இல்லாமல் படிக்கிறானோ அவன் தான் கெட்டிக்காரன் என்று முடிவு செய்தார்கள். பிறகு இருவரும் அவரவர் வீடு சென்றனர்.

அன்றிரவு பட்டு, தன் அப்பாவிடம் கேட்டு கோவிலில் எழுதியிருந்த பாட்டை மனப்பாடம் செய்துகொண்டான். அதே மாதிரி, கிட்டுவும் தன் அப்பாவைக் கேட்டுத் தெரிந்து மனப் பாடம் செய்துகொண்டான். இதில் வேடிக்கை என்னவென்றால், இரண்டு அப்பாக்களும் வேறு வேறு பாட்டுக்களைச் சொல்லிக் கொடுத்துவிட் டார்கள்.

மறுநாள் இருவரும் கோயிலுக்குச் சென் றார்கள். சுவருக்கு வெகுதூரத்தில் நின்று பாட்டைப் படிக்க ஆரம்பித்தார்கள். ஆனால், சிறிது நேரத்தில் அவர்கள் வெவ்வேறு பாட்டுக் களைப் படிப்பதாகத் தெரிந்துவிட்டது. 'என்னு டையதுதான் சரி' என்று ஒவ்வொருவனும் சொன்னான். சண்டை வந்துவிட்டது.

அப்பொழுது, அந்த வழியாகப்போன கோவில் குருக்களிடம் அந்தப் பாட்டைப்பற்றிக் கேட்டார்கள். அதற்கு அவர் என்ன சொன்னார் என்று நினைக்கிறீர்கள் ?

"பாட்டா! ஏது பாட்டு? சுவர்மீது முன்பு ஒரு பாட்டு எழுதியிருந்தது. அதைத்தான் நேற்று வெள்ளையடிக்கும்போது அழித்து விட் டார்களே !" என்றார் அந்தக் குருக்கள்.

அப்போது பட்டு, கிட்டு இவர்கள் முகங் களை நீங்கள் பார்க்கவேண்டுமே!

திருடர்கள் ஜாக்கிரதை?

ஆர். வேணுகோபால்

நந்திக் கிராமம் ஒரு சிறிய ஊர். அங்கு குப்பனு, அவன் மனைவி குப்பாயியுடன் வாழ்ந்து வந்தான். குப்பன் தோட்டவேலை செய்பவன். கஷ்டப்பட்டு உழைத்துக் கொஞ்சம் பணம் சேர்த்து வைத்திருந்தான்.

ஒருநாள், குப்பன் கொஞ்ச தூரத்திலுள்ள பட்டணத்துக்குப் போய் ஒரு பசுமாடு வாங்கிவர எண்ணினன். இதை அவன் தன் மனைவியிடம் கூறினன். அவளும் 'சரி' என்று பிரயாணத்துக்கு ஏற்பாடு செய்து சாதம் கட்டிக் கொடுத்தாள். ரூபாய் நூறு எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

பட்டணம் கொஞ்ச தூரத்தில் இருந்ததால் ரயிலில்தான் போகவேண்டும். குப்பன் இதுவரை ரயிலில் ஏறியதே கிடையாது. ரயில்வே ஸ்டேஷனுக்குப் போனன்; டிக்கட் வாங்கிக் கொண்டான். ரயில் வந்தது. உடனே, குப்பன் அதில் ஏறினன். உள்ளே இங்குமங்கும் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது 'திருடர்கள் ஜாக்கிரதை!' என்று அங்கே எழுதப்பட்டிருந்ததைப் பார்த்துவிட்டான்!



"அடடா இங்கே திருடர்கள் இருப்பார்கள் போலிருக்கிறதே!" என்று எண்ணி வேறு அறைக்குப் போனான். அங்கும் 'திருடர்கள் ஜாக்கிரதை' என்ற போர்டு இருந்தது. அதற்கு அடுத்த அறைக்குப் போனான். எல்லா அறைகளிலும், 'திருடர்கள் ஜாக்கிரதை!" என்ற போர்டுகள் இருந்தன.

"ஐயய்யோ, இந்த ரயிலில் எல்லா அறைகளிலும் திருடர்கள் இருப்பார்கள் போலிருக்கிறது. கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணத்தை இந்த திருட்டுப் பயல்களிடம் ஏன் கொடுக்க வேண்டும்? நல்ல வேளையில் வீட்டுக்குப் போய்ச் சேரலாம்" என்று திரும்பி வீட்டுக்கே வந்துவிட்டான்.

பட்டணம் செல்வதாகச் சொல்லிவிட்டுப் போன குப்பன் உடனேயே திரும்பிவருவதைக் கண்ட, அவன் நண்பர்கள், "ஏண்டா குப்பா திரும்பி வந்துவிட்டாய்?" என்று கேட்டார்கள்.

குப்பன் நடந்ததைச் சொன்னதும், அவர்களுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

தப்பித்தார்!

'சலம்'

மிஸ்டர் தேவகிராம் பெரிய டாக்டர். ஆனாலும் கைராசி இல்லாதவர். அதனால், அவருக்கு வரும்படி பூஜ்யம். வரும்படி இல்லாமல் சென்னையில் வாழ முடியுமா? அதுவும் தமது பெரிய குடும்பத்துடன் வாழ்வது என்றால் வரும்படி இல்லாதவருக்கு எப்படி முடியும்? ஆகையால், தமது சொந்த ஊராகிய மதுரைக்கே சென்றுவிட்டார்.

ஒருநாள், எதிர்பாராத விதமாக அவருக்கு ஒரு அவசரக் கேஸ் வந்துவிட்டது! நல்ல வேளையாக டாக்டரின் சிகிச்சையினால் நோயாளி பிழைத்துக் கொண்டார்! அதனால், அவருக்கு ரூ. 500 கொடுத்தார்கள்.

கிடைத்த ரூபாய் ஐநூற்றையும் தேவகிராம் பத்திரமாகப் பைக்குள் வைத்துக்கொண்டு, வீடு நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தார். அப்பொழுது, மணி ஏழரை இருக்கும். இரவாகிவிட்டதே என்ற கவலை ஓர் புறம்; தன்னந் தனியாகப் போகிறோமே என்ற பயம் மறுபுறம். சுற்று முற்றும் பார்த்துக்கொண்டே சென்றார்.

அப்பொழுது இரண்டு முரடர்கள் பின்னால் தொடர்ந்து வருவதைத் தேவகிராம் கண்டார்.

என்ன செய்வது என்று அறியாமல் இன்னும் வேகமாக நடக்க ஆரம்பித்தார். அந்த இரண்டு பேரும் பேசுவது, இவருடைய காதில் விழுந்தது.

"உம், எங்கே பார்க்கலாம். அதோ போகிருரே அவர்தான்.... ......"

இப்படி அவர்கள் பேசுவதைக் கேட்டதும் டாக்டருக்கு மேலும் பயம் அதிகமாகிவிட்டது. பயம் அதிகம் ஆகஆக, நடையின் வேகமும் அதிகமாயிற்று.

அவர்கள் இருவரும் டாக்டரைவிட வேகமாக நடந்து, டாக்டரின் அருகிலும் வந்துவிட்டார்கள். ஆனுல் அவர்கள் டாக்டரைப் பிடிக்கவுமில்லை; பிடித்து அடிக்கவுமில்லை; அடித்துப் பணத்தைப் பறிக்கவுமில்லை; அப்படியானுல் என்னதான் செய்தார்கள் ?

அவர்களில் ஒருவன் டாக்டரின் முன்னுல் சென்று மற்றவனைப் பார்த்து 'பார்த்தாயா, அண்ணே, யார் இந்த ஐயாவை முதலிலே முந்தியது? நான்தானே! இன்றைக்கு, நீ தான் எனக்கு டீ வாங்கித்தரவேணும். சரிதானே?" என்ருன்.

அப்பொழுதுதான் டாக்டருக்கு, மூச்சு நிற்காது ஓட ஆரம்பித்தது!

கந்தன் கண்ட காந்தி

ராம. சோமசுந்தரம்

கந்தனுக்கு வயது எட்டு. பணக்காரர் வீட்டுப் பையன். அவனுக்குக் காந்திமீது அபாரமான பிரியம். காங்கிரஸ் கூட்டங்களுக்கு தவறாமல் போய் வருவான்.

காந்தி ஜெயந்தி வந்தது. கந்தனுக்குப் பரம ஆனந்தம். ஊரில் பல பெரியார்கள் பிரசங்கம் செய்தார்கள். கந்தன் தொண்டர் உடை தரித்து கூட்டங்களில் யாரும் சப்தம் போடாதபடி பார்த்துக் கொண்டான்.

அன்று காந்தி மகானைப்பற்றி நடந்த பிரசங்கங்களைக் கேட்டதிலிருந்து, 'இப்படிப் பட்ட மகானை எப்போது பார்க்கப்போகிறேனே!" என்று நினைத்துக் கொண்டான்.

அன்று இரவு தூங்கும்போது, ஒரு கனவு கண்டான். அதில் மகாத்மா காந்தி தோன்றினர். கந்தன்

அவருடைய கால்களில் விழுந்து வணங்கினுன். ஆனுல், காந்தி அவனைக் கவனிக்கவில்லை. ஏதோ காகிதத்தில் எழுதிக் கொண்டே யிருந்தார்.

"தாங்கள் என்ன எழுதிக்கொண்டிருக் கிறீர்கள் ?" என்று கந்தன் கேட்டான்.

அதற்கு அவர்,"எனக்கு பிரியமானவர்களின் பெயர்களையெல்லாம் எழுதிக் கொண்டிருக் கிறேன்" என்ருர்.

கந்தன் :— அப்படியானுல் என் பெயரும் இருக் கிறதா ?

காந்தி : — இல்லை.

கந்தன்:— என்ன! இராப்பகலாக நான் தங்களையே நினைத்துக் கொண்டிருக்கிறேன். என் பெயர் இல்லை என்கிறீர்களே !

காந்தி:— எனக்கு மிகவும் பிரியமானவர்கள் யார் தெரியுமா? உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி, பணக்காரன், ஏழை என்று வித்தியாசம் பாராட் டாமல் எல்லோரையும் சகோதரர் போல நினைப் பவர்களும், எப்போதும் உண்மையே பேசுபவர் களும், எந்த உயிருக்கும் கெடுதி செய்யாதவர் களும்தான் எனக்கு பிரியமானவர்கள். நீயும் அப்படி நடந்துகொண்டால் உன் பெயரும் இதில் சேர்ந்துவிடும்.

கந்தன் :— ஆஹா, இனிமேல் கட்டாயம் அப்படியே நடந்துகொள்கிறேன்.

இதைக் கேட்டதும் காந்திஜி புன்னகை செய்துகொண்டே மறைந்துவிட்டார். அன்று முதல் கந்தன் உண்மையே பேசி, அஹிம்சையைக் கடைப் பிடித்து தீண்டாமையை ஒழித்து எல்லோரும் போற்ற, நல்லவனாக வாழ்ந்தான்.

யார் அரசன்?

வெ. ச. சோமசுந்தரம்

முன்பு ஒரு அரசன் இருந்தான். அவன் தன் நாட்டை மிகுந்த செழிப்புடன் ஆண்டு வந்தான். அவனுக்கு மூன்று குமாரர்கள் இருந்தார்கள். அரசன் மிகவும் கிழவன் ஆகிவிட்டதால், அரசாள முடியவில்லை. மூன்று புதல்வர்களில் யாரை அரசனுக்குவது என்று தெரியாமல் ஏங்கி இருந்தான்.



ஒருநாள், அரசன் மந்திரியை அழைத்துத் தன் மனக்கஷ்டத்தை எடுத்துச் சொன்னுன். மந்திரி அரச குமாரர்களை வரவழைத்தான். அவர்களை நோக்கி, " உங்களை மிருகங்களாக ஆக்கினுல், ஒவ்வொருவரும் எந்த மிருகமாக மாற இஷ்டப்படுவீர்கள் ?" என்று கேட்டான்.

மூத்தவன், " நான் ஒரு ஆண் சிங்கமாக மாற ஆசைப்படுவேன். அப்பொழுது நான்

காட்டிலுள்ள மற்ற மிருகங்களை எல்லாம் வதைத்து, அந்தக் காட்டுக்கே அரசனாக ஆவேன்." என்றான்.

இரண்டாவது மகன், "நான் ஒரு மத யானையாக மாற இஷ்டப்படுவேன். அப்பொழுது, நான் காட்டிலுள்ள மிருகங்களை என் துதிக் கையால் தூக்கி எறிந்து, என்னைக் கண்டவுடனேயே பயப்படும்படி செய்வேன்" என்றான்.

மூன்றாவது மகன், "நான் நாட்டில் ஒரு பசுவாக வாழ ஆசைப்படுவேன்: மக்களுக்கெல்லாம் பலவிதத்தில் நன்மை செய்வேன். என் அருமைக் கன்றுகளுக்கும் என்னை வளர்ப்பவர்களுக்கும், அவர்களது குழந்தைகளுக்கும் நிறையப் பால் அளித்து ஆனந்தமாக வாழ்வேன்" என்று கூறினான்.

இதைக் கேட்ட மந்திரி அரசனை நோக்கி "அரசே, தங்கள் கடைசிக் குமாரன் தான் உங்களுக்குப் பின் அரசனாகத் தகுந்தவன். பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் அவனிடம்தான் இருக்கிறது" என்று சொன்னான்.

அரசன் மிகுந்த சந்தோஷம் அடைந்தான். மறுநாளே, தன் கடைசி மகனுக்குப் பட்டத்தைச் சூட்டினான். பட்டாபிஷேகம் சிறப்பாக நடந்தது.

அப்துல்லாவின் ஏமாற்றம்

கே. பி. எம். முசாபர்.

அப்துல்லாவுக்கு 'லாட்டரி' பைத்தியம். சதா லாட்டரிகளுக்கு பணம் அனுப்புவதும், அதைத் தன் நண்பர்களிடம் பெருமையாய் அடிக்கடி சொல்வதும்தான் அவனுடைய முக்கிய வேலை. இதுவரை ஏராளமான ரூபாய்கள் தொலைத்தும் அவனுக்கு அந்தப் பைத்தியம் தீரவில்லை.

கடைசியாக, 'டெர்பி லாட்டரி'க்குப் பணம் அனுப்பியிருந்தான். அதில், தனக்கு எப்படியாவது முதல் பிரைஸ் விழுந்து விடுமென்று சொல்லிக் கொண்டிருந்தான். ஏன்?............... தனக்கே முதல் பிரைஸ் விழுந்து, தான் பெரிய பங்களா ஒன்று வாங்கி அதில் சகல சுகங்களையும் அனுபவிக்கப் போகிறேனென்றுகூட, இன்பக் கனவு கண்டு கொண்டிருந்தான்.

அவன் அனுப்பியிருந்த "டெர்பி லாட்டரி" குலுக்கும் தேதியும் வந்தது; முதல் பிரைஸ் விழுந்தவர்களுக்கு தந்தி மூலம் அறிவிப்பார்கள் என்று அப்துல்லாவுக்குத் தெரியுமாதலால், அன்று முழுவதும் வீட்டிலேயே தங்கிவிட்டான்.

அவன் அடிக்கடி தெருவில் வந்து நின்று கொண்டு தந்திச் சேவகன் வருகின்றனு என்று எதிர்பார்த்தவண்ணமாய் இருந்தான்.

திடீரென்று சிவப்பு சைக்கிளில் ஓர் தந்திச் சேவகன் அப்துல்லாமுன் இறங்கினன். அவன் ஒரு தந்தியை நீட்டினன். இது கனவு தானே என்று ஸ்தம்பித்து நின்றுவிட்டான் அப்துல்லா.

ஆனல், இது உண்மை என்று தெரிந்தவுடன் ஒரே பாய்ச்சலில் வீட்டிற்குள் புகுந்து அலமாரியைத் திறந்து, ரூபாய் ஐந்து எடுத்து

வந்து தந்திச் சேவகனுக்குக் கொடுத்து அனுப்பிவிட்டு, வெகு ஆவலுடன் தந்தியை உடைத்துப் பார்த்தான்.

அதில் எழுதியிருந்ததைப் பார்த்ததும் இடி விழுந்தது போல் பிரக்ஞை இழந்து கல்லாய்ச் சமைந்துவிட்டான். ஏனெனில், அந்த தந்தியில், கீழ்வருமாறு காணப்பட்டது.

"பாட்டி இறந்துவிட்டாள், உடனே வரவும்."

எப்படி நேர்ந்தது?

''ராமன்''

ஒரு ஊரில் ஒரு பிரபு இருந்தார். அவருடைய வீட்டு வாசலில் ஒரு தபால் பெட்டி இருந்தது. வரும் தபால்களை எல்லாம் தபால்காரன் அந்தப் பெட்டியில் போட்டுவிட்டுப் போய்விடுவான்.

ஒருநாள், அந்தப் பிரபு அயலூருக்குப் போக வேண்டியிருந்தது. தம் குமாஸ்தாவைக் கூப்பிட்டு "என் பெயருக்கு வரும் கடிதங்களை இந்த விலாசத்துக்கு அனுப்பிவிடு" என்று சொல்லி ஒரு விலாசத்தைக் குறித்துக் கொடுத்துவிட்டுச் சென்றார்.

ஆனால் ஒருவாரம் ஆகியும் கடிதம் ஒன்றும் வரவில்லை. அதனால், அவர் தம் குமாஸ்தாவுக்கு ஒரு தந்தி அடித்து, "ஏன் லெட்டர்களை இன்னும் அனுப்பவில்லை. உடனே அனுப்பு என்று சொன்னார்.

தந்திச் சேவகன் குமாஸ்தாவிடம் நேரே சென்று தந்தியைக் கொடுத்து விட்டுச் சென்ருன். அதற்கு அந்தக் குமாஸ்தா "நான் என்ன செய்யட்டும்? தபால் பெட்டியின் சாவி தங்களிடம் அல்லவா இருக்கிறது. அதை உடனே அனுப்புங்கள்" என்று மறு தந்தி கொடுத்தார்.

மறுநாள், பிரபு சாவியை ஒரு கவரில் போட்டு அனுப்பிவிட்டார், ஆனுலும் ஒரு வாரமாகியும் கடிதங்கள் வரவில்லை.

இது எப்படி நேர்ந்தது என்று உங்களுக்குத் தெரிகிறதா? இல்லையென்ருல் சொல்லுகிறேன்.

பிரபு கவருக்குள் தானே சாவியைப் போட்டு அனுப்பினர்? அந்தக் கவரையும் தபால்காரன் வெளியே இருந்த தபால் பெட்டியிலேயே போட்டுவிட்டுப் போய்விட்டான். சாவி தபால் பெட்டிக்குள் இருக்கும்போது, தபால் பெட்டியை எப்படித் திறப்பது? பெட்டியைத் திறக்கச் சாவி வேண்டும், சாவியை எடுக்கப் பெட்டியைத் திறக்க வேண்டும்.



மதராஸ் ரிப்பன் பிரஸ்,
புதுக்கோட்டை.